## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# மீன்பிடி படகு ஓட்டுநர் உரிமம் பயிற்சி அளித்திடும் திட்டம்

வணக்கம் சின்னப்பன், எப்பிடி இருக்க



வணக்கம் நிக்கோலஸ், நல்லா இருக்கேன்



பார்த்து ரொம்ப நாள் ஆகுது, எப்பிடி போயிட்டு இருக்கு வாழ்க்கை?



நல்லா போயிட்டு இருக்கு நிக்கோலஸ்




அப்புறம், நீ படகிற்க்கான ஓட்டுநர் உரிமம் வைத்து இருக்கியா?



இல்லையே ஏன் கேக்குற




அதுவா படகிற்கான ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு தமிழ்நாடு அரசின் மீன்வளத்துறையில் விசைப் படகு ஓட்டுநர் பயிற்சி பெறுவதற்க்கு ஒரு திட்டம் உள்ளதாக கேள்வி பட்டேன்
அப்படியா? அந்த திட்டத்தினை பற்றி கொஞ்சம் விரிவாக சொல்றியா?
தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை சேர்ந்த 500 மீனவ இளைஞர்களுக்கு மீன்பிடி படகு ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது
ம்ம்ம்... அப்புறம் இதை பற்றி கூடுதல் தகவல் சொல்ல முடியுமா?
நமது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் கூடுதல் தகவல்களுக்கு நமது மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலம் சென்று விசாரி, அவர்கள் உனக்கு தேவையான பயிற்சி மற்றும் உரிமம் வழங்க ஏற்பாடு செய்வார்கள்.
ரொம்ப நன்றி நிக்கோலஸ், நான் உடனே சென்று விசாரித்துக் கொள்கிறேன் நண்பா